**தேர்வுநெறியாளர்**

**தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி)**

**திருச்சிராப்பள்ளி-620002**

---

16.10.2020

## மாணவர்களுக்கான அறிவிப்புகள்

## பருவ நிலுவைத்தேர்வுகள்- ஏப்ரல் 2020

அனைத்து இளநிலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கான ஏப்ரல் 2020க்குரிய பருவ நிலுவைத்தேர்வுகள் 19-10-2020 முதல் தொடங்குகின்றன. எனவே அனைத்து மாணவர்களும் தத்தம் தேர்வுகளுக்குத் தயாராகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| | | |
|---|---|---|
| தேர்வுமுறை | : | **கல்லூரி இணையதளம் வாயிலான இயங்கலைத்தேர்வு**<br>**https://studerp.sjctni.edu/OnlineExam/login/** |
| நாள்கள் | : | ***19-10-2020 முதல் 02-11-2020 முடிய.*** |
| பாடப்பகுதிகள் | : | **முழுமையான பாடத்திட்டம்** |
| வினா அமைப்பு | : | **நேரடி வகுப்பின்போது பின்பற்றப்பட்ட அமைப்புமுறை** |
| காலஅளவு | : | ***3 மணி நேரம்.*** |

### கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கிய குறிப்புகள்

1. தேர்வு தொடங்குவதற்கு **இருபது நிமிடங்களுக்கு** முன்பாகவே மாணவர்கள் கல்லூரியின் இயங்குதளத்தினுள் நுழைந்திட வேண்டும்.
2. பதற்றமடையவேண்டாம். ஏதேனும் இடையூறு நேர்ந்தால் தொடர்பு கொள்க: **0431-4226505 or 0431-4226384**
3. வினாஎண்ணைத் தெளிவாக எழுதுவதற்கு ஏற்ப விளிம்புக்கோடு வரையப்பெற்ற A-4 தாளில் ஒரு பக்கத்தை மட்டுமே பயன்படுத்தவேண்டும்.
4. **விடைத்தாளின் முதல் பக்கத்தில்** கீழ்க்கண்ட விவரங்களைக் குறிப்பிட்டுத் தொடங்கவேண்டும்

| | | | |
|---|---|---|---|
| Register No | | Course Code | |
| Semester | | Course Title | |
| Name | | Signature | |

5. ஏனைய தாள்களின் ஒவ்வொரு பக்கத்திலும் மேலே வலது ஓரத்தில் பக்கஎண்ணும் (Page Number) இடது ஓரத்தில் பதிவெண்ணும் (Register Number) குறிப்பிடவேண்டும்

6. ஒவ்வொரு பக்கத்திலும் **குறைந்தது 25 வரிகளில்** விடைகள் தெளிவாகவும் ஏற்கத்தக்கதாகவும் எழுதப்படவேண்டும்.
7. குறித்த நேரத்தில் தேர்வை எழுதி முடித்தவுடன் Clear scan, Adobe Scan, Microsoft office Lens போன்ற பொருத்தமான செயலியின் உதவியால் ஒழுங்கான வரிசைமுறையில் பக்கங்களை ஒளிவருடல் (Scan) செய்யவேண்டும். அதன்பின் **அவற்றை PDF கோப்பாக உருவாக்கிக் கல்லூரியின் ERP மாணவர் இயங்குதளத்தில் பதிவேற்றம்** (Upload) செய்யவேண்டும்.
8. **உங்கள் துறைஎண்(Register Number), பாடத்தாளின் குறியீட்டு எண் (Course code)** ஆகியவற்றைக் கொண்டதாகக் கோப்பின் பெயர் அமைதல் வேண்டும். பாடத்தாளின் குறியீட்டு எண் இளநிலை வகுப்புகளுக்கு 6இலக்கங்களிலும் முதுநிலை வகுப்புகளுக்கு 4 இலக்கங்களிலும் அமைகிறது. (சான்று: 17UPH101_630216, 18PEN501_4115).
9. 5MB அளவிலான PDF வடிவில் அமைந்த விடைத்தாள்களை மட்டுமே பதிவேற்றம் செய்யவேண்டும்
10. அன்றைய தேர்வுக்குரிய **விடைத்தாள்களைச் சரிபார்த்தவுடனோ அல்லது 30 நிமிடங்களுக்குள்ளாகவோ** பதிவேற்றம் செய்யவேண்டும்.
11. **மின்னஞ்சல் வழியாக விடைத்தாள்களை (PDF கோப்புகள்) தேர்வுநெறியாளர் அலுவலகத்திற்கு அனுப்புவது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது.**
12. மாணவர்கள் பருவநிலுவைத்தேர்வில் எழுதுகின்ற வெவ்வேறு பாடங்களுக்குரிய் **விடைத்தாள்களின் அசல்படியைப்** பத்திரமாகவும் தெளிவாகவும் வரிசைப்படுத்திக் கோர்த்துப் **பாதுகாக்குமாறு** அறிவுறுத்தப்படுகிறார்கள்.
13. மாணவர்கள் ஒளிவருடல் செயலியைப் பயன்படுத்திப் பதிவேற்றம் செய்வதற்குரிய கோப்பினை உருவாக்கவும் மேலே குறிப்பிடப்பட்ட வடிவமுறையில் அதனைச் சேமிக்கவும் பயிற்சி மேற்கொள்ளுமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

முதல்வர் தேர்வுநெறியாளர்

PRINCIPAL

CONTROLLER OF EXAMINATIONS